தினத்தந்தி - 26/11/2022



மயில்சாமி அண்ணாதுரை, அருள்மொழி, நாகப்பன் வள்ளியப்பன், சுனில் கிருஷ்ணன், சிவபாலன் இளங்கோவன், பசுபதி, முரளி, லட்சுமி

**கல்லூரி பேராசிரியர்கள்**

# மேல் அங்கி அணிவது பற்றி சிறப்பு ஹலோ தமிழா நிகழ்ச்சி

## ஹலோ எப்.எம்.மில் இன்று ஒலிபரப்பாகிறது

சென்னை, நவ.26–

கல்லூரி பேராசிரியர்கள் மேல் அங்கி அணிய வேண்டும் என்ற உத்தரவு பற்றிய சிறப்பு ஹலோ தமிழா நிகழ்ச்சி இன்று (சனிக்கிழமை) காலை 7 மணிக்கு ஹலோ எப்.எம்.மில் ஒலிபரப்பாகிறது. வழக்கறிஞர் அருள்மொழி, மனநல மருத்துவர் சிவபாலன் இளங்கோவன், பல்கலை ஆசிரியர் சங்க மாநில துணைத் தலைவர் பசுபதி, கல்லூரியின் முன்னாள் முதல்வரும், கல்வியாளருமான முரளி ஆகியோர் பங்கேற்று தங்கள் கருத்துகளை கூறுகின்றனர்.

இந்திய நிறுவனங்களின் வேலைவாய்ப்பில், அமெரிக்க, ஐரோப்பிய பொருளாதாரத்தின் தாக்கம் ஏற்படுமா? என்பது பற்றி மாலை 6 மணிக்கு சிறப்பு தாறுமாறு தர்பார் நிகழ்ச்சி ஒலிபரப்பாகிறது. இதில், பொருளாதார வல்லுனர் நாகப்பன் வள்ளியப்பன், மென்பொருள் நிறுவன மனிதவளத்துறை மேலாளர் லட்சுமி இருவரும் பங்கேற்று பேச உள்ளனர்.

இதையடுத்து இடம்பெறும் 'கதையாடல்' நிகழ்ச்சியில் எழுத்தாளர் சு.வேணுகோபால் எழுதிய 'புத்துயிர்ப்பு' சிறுகதை ஒலிபரப்பாகிறது. இந்த கதை குறித்து, எழுத்தாளர் சுனில் கிருஷ்ணன் தனது கருத்துகளை கூற உள்ளார். இந்த கதையின் சிறுபகுதி ஒன்று நாடக வடிவிலும் இடம்பெறும்.

நாளை (ஞாயிற்றுக்கிழமை) மதியம் 12 மணிக்கு ஒலிபரப்பாக விருக்கும் 'சன்டே கிராமபோன்' நிகழ்ச்சியில் விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை கலந்துகொண்டு பேச இருக்கிறார்.